**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE/ PRESIDING OFFICER SPECIAL COURT FOR E.C. AND NDPS ACT CASES, PUDUKKOTTAI.**

Present:Thiru. T. Panneerselvam, MBA.,M.L.,
Additional District and Sessions Judge/Presiding Officer, Pudukkottai.

**Thiruvalluvar Aandu 2057 Parapava Varudam Vaikasi Thingal 15th day**
**Friday the 29th day of May' 2026**

**Calender Case No.39/2021**
**CNR No. TNPD01-000885-2021**

| | | |
|---|---|---|
| 1. | Serial Number | - |
| 2. | Name of the Police Station and the crime number of the offence | NIB CID Sivagangai P.S. in Cr.No. 05/2021 u/s 8(c) r/w 20(b)(ii)(B) ,25 of NDPS Act 1985 |
| | Description of the accused | |
| 3. | Name | 1) Velmurugan<br>2) Ponni |
| 4. | Father's Name /Husband Name | 1) Raman<br>2) Rajendiran |
| 5. | Occupation | 1) Coolie<br>2) Coolie |
| 6. | Residence | 1) Senjaivoorani North Street, Karaikudi, Sivagangai.<br>2) Senjai Pillaiyarkoil Street, Karaikudi, Sivagangai. |
| 7. | Age | 1) 38<br>2) 40 |
| | Date of | |
| 8. | Occurrence | 17.02.2021 |
| 9. | Complaint | 17.02.2021 |
| 10. | Apprehension | 1) 18.02.2021<br>2) 18.02.2021 |
| 11. | Release on bail | 1) 31.03.2021 |

| | | |
|---|---|---|
| | | 2) 13.03.2021 |
| 12. | Commitment | - |
| 13. | Commencement of Trial | 20.04.2026 |
| 14. | closure of trial | 27.05.2026 |
| 15. | Sentence or order | 29.05.2026 |
| 16. | Service of copy of Judgment or finding on accused. | 29.05.2026 |
| 17. | Explanation of delay | -- |
| 18. | Miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine petitions like petitions under section 317of the Code: | --- |
| 19. | Examination in Chief and cross-examination of a witness: | Chief Cross<br>1) 20.04.2026 - 20.04.2026<br>2) 26.05.2026 - 26.05.2026 |
| | Examination of the Accused u/s 313 of the Code. | 27.05.2026 |
| 21. | Abscondence of an accused an his appearance/production: | --- |
| 22. | Victim Compensation Order: | ----- |
| 23. | The Period of remand of the Accused | 1) 18.02.2021 --31.03.2021<br>2) 18.02.2021-- 13.03.2021 |
| 24. | Grant of stay by superior Courts and the results thereof; and | -- |
| 25. | Date of filing of the complaint/Final report in the Court | 07.07.2021 |

இவ்வழக்கு 27.05.2026 –ம் தேதியன்று என் முன்பு விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவருக்காக அரசு தரப்பு சிறப்பு பொது வழக்கறிஞர் திரு. எம். பாலசுப்ரமணியன், M.A.,B.L., அவர்கள்

முன்னிலையாகியும். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி. மணிகண்டன், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ,

**தீர்ப்புரை**

கடந்த 17.02.2021–ம் தேதி 19.00 மணிக்கு சிவகங்கை மாவட்டம் இவ்வழக்கின் 1 வது எதிரி சிவகங்கை மாவட்டம் காரைக்குடி முனீஸ்வரன் கோவில் சந்து அருகே TN 63 T 6966 என்ற பதிவெண் மற்றும் வெள்ளை சிகப்பு நிறம் கொண்ட Honda Passion Plus இருசக்கர வாகனத்தில் வெள்ளைநிற சாக்கு பையில் அரசால் தடை செய்யப்பட்ட போதைப்பொருளான பூ, இலை, காம்பு விதைகளுடன் கூடிய 1.500 கிகி எடை கொண்ட கஞ்சாவை எவ்வித அரசு அனுமதியோ இன்றி வைத்திருந்ததாகவும் மேலும் 2 வது எதிரி 1 வது எதிரிக்கு கஞ்சாவை விற்பனை செங்யய கொடுத்து உடந்தையாக இருந்துள்ளீர் என்றும் அதன் மூலம் 1 வது எதிரி மீது சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) ,25 of NDPS Act 1985–ன்கீழும் 2 வது எதிரி மீது சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன்கீழ் NIB CID Sivagangai காவல் ஆய்வாளரால் இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகள் இந்த நீதிமன்றத்தில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல் அனைத்தும், எதிரிகளுக்கு இலவசமாக குவிமுச பிரிவு 207–ன் கீழ் வழங்கப்பட்டன.

3.எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்தும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டும், 1 வது எதிரி மீது பிரிவு 8(c) r/w

20(b) (ii)(B) ,25 of NDPS Act 1985 கீழும் , 2 வது எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985 – ஆம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01–ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து வழக்கில் விசாரணை கோரியுள்ளார்கள்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 மற்றும் அசா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அதசாஆ.1 முதல் அதசாஆ.13 வரையிலான சான்றாவணங்களும் சான்றுப்பொருள் 1 மற்றும் 2 குறியீடு செய்யப்பட்டுள்ளன.

__5. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து அறியவரும் அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு–__

(I) அசா.1 திருமதி.சகுந்தலா தனது சாட்சியத்தில் தான்ன் 17.02.2021–ம் தேதி 16.00 மணிக்கு ரகசிய தகவலாளி ஆய்வாளரிடம் நேரில் ஆஜராகி சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை சேர்ந்த ராமன் மகன் வேல்முருகன் என்பவர் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி முனீஸ்வரன்கோவில் சந்து அருகே கஞ்சா வைத்து விற்பனை செய்ய இருக்கிறார் என்றும் காவல் ஆய்வாளராகிய நீங்கள் நேரில் வந்ததால் அந்த நபரை அடையாளம் காட்டுவதாகவும் கிடைத்த தகவலை காவல் துணை கண்காணிப்பாளரிடம் தெரிவித்து அதிகாரிகளின் உத்தரவின் பேரில் நிலையத்திலிருந்து தானும், த.கா.அன்பரசன், முத்துக்குமார், சரவணன் ஆகியோருடன் தக்க உபகரணங்களுடன் 16.30 மணிக்கு புறப்பட்டு தகவலாளி சொன்ன இடமான சிவகங்கை மாவட்டம் காரைக்குடி முனீஸ்வரன்கோவில் சந்து அருகே 18.30 மணிக்கு சேர்ந்து தகவலாளியை சந்தித்து போதை பொருள் சம்பந்தமாக கண்காணித்து கொண்டிருந்தபோது டி.என்.63 T 6966 என்ற வெள்ளைநிற Honda இருசக்கர வாகனத்தில்

வந்துக்கொண்டிருந்தவரை தகவலாளி அடையாளம் காட்டிவிட்டு மறைய வாகனத்தை மறித்து அந்த நபரிடம் தங்களுடைய அடையாள அட்டையை காண்பித்து தங்களை அறிமுகம் செய்து கொண்டு அவரை விசாரித்தபோது அவர் பெயர் வேல்முருகன் என்றும் அவர் முகவரியை சொன்னார் என்றும், எதிரியாகிய உம்மிடம் கஞ்சா எனும் போதை பொருள் உள்ளது என்றும், உங்களை சோதனை செய்ய வேண்டும் நீங்கள் சம்மதித்தால் நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோஅழைத்து செல்ல உரிமையுள்ளது என்று அவரிடம் கூறி அவர் தேவையில்லை தாங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னதன்பேரில் 19.30 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து, அதில் தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தானும், த.கா.முத்தரசன் ஆகிய இருவரும் கையெழுத்து செய்தோம் என்றும், அந்த சோதனை சம்மத கடிதம் அ.த.சா.ஆ,1 என்றும், பின்பு இருசக்கர வாகனத்தில் இருந்த வெள்ளை நிற சாக்கு பையை சோதனை செய்தபோது அதில் பூ, இலை, விதைகளுடன் கூடிய கஞ்சா இருந்தது என்றும், அதை எடை போட்டு பார்த்தபோது 1.500 கிகி எடை இருந்தது என்றும், கஞ்சாவையும், அவர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அந்த கைப்பற்றுதல் மகஜரில் தானும், த.கா.முத்தரசன் ஆகிய இருவரும் கையெழுத்து செய்தோம் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.2 என்றும், பின்பு பகுப்பாய்விற்காக 25 கிராம் வீதம் இரு பொட்டலங்களில் NIB–CID சீல் வைத்து, அதற்கு S1, S2 என்று குறியீடு செய்தும், மீதமுள்ள 1.450 கிகி கஞ்சாவை அதே பையில் கட்டி, SHO சீல் வைத்து அதற்கு P1 என குறியீடு செய்தும், அதில் சாட்சிகள், எதிரிகளிடம் கையெழுத்து பெற்று, 1–வது எதிரியை 20.15 மணிக்கு எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும், த.கா.முத்தரசன் ஆகிய இருவரும் கையெழுத்து செய்தோம் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2–வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அந்த 2–வது

கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.3 என்றும், பின்பு அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருளை விற்ற குற்றத்திற்காக 20.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்தார்கள் என்றும், பின்பு கைது அறிக்கை தயார் செய்து, தானும், த.கா.முத்தரசன் ஆகிய இருவரும் கையெழுத்து செய்தோம் என்றும், அந்த கைது அறிக்கை அ.த.சா.ஆ.4 என்றும், 2–வது எதிரி பொன்னியை சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காரைக்குடி செஞ்சை பிள்ளையார்கோவில் வீட்டில் அருகில் நடந்து வந்த நபரை வேல்முருகன் அடையாளம் காட்ட அவரை பிடித்து விசாரித்தபோது தனது பெயர் பொன்னி, க/பெ.ராஜேந்திரன், செஞ்சை பிள்ளையார்கோவில் தெரு, காரைக்குடி என்று சொன்னார் என்றும், அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும், த.கா.முத்தரசன் ஆகிய இருவரும் கையெழுத்து செய்தோம் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2–வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அந்த 2–வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.5 என்றும், பின்பு கைது அறிக்கை தயார் செய்து, தானும், த.கா.முத்தரசன் ஆகிய இருவரும் கையெழுத்து செய்தோம் என்றும், அந்த கைது அறிக்கை அ.த.சா.ஆ.6 என்றும், எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துகளுடன் 23.30 மணிக்கு நிலையம் வந்து கு.எண்.5/2021 சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B), 25 NDPS Act–ன்படி வழக்கு பதிவு செய்ய காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அசா.2 திருமதி.ஹேமலதா தனது சாட்சியத்தில் கடந்த 17.02.2021–ம் தேதி சிவகங்கை NIB CID காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 16.00 மணிக்கு தகவலாளி நேரில் வந்து ஆஜராகி கொடுத்த தகவலை பெற்று சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை சேர்ந்த ராமன் மகன் வேல்முருகன் என்பவர் கொடுத்த காரைக்குடி

முனியஸ்வரன் கோவில் அருகே கஞ்சா விற்பனை செய்ததாக கொடுத்த தகவலை தான் பெற்று எழுத்து பூர்வமாக பதிவு செய்து தனது உடனடி மேல் அதிகாரிக்கு தகவலை தெரிவித்தேன் என்றும், தான் பதிவு செய்த தகவல் அதசாஆ.7 என்றும், அதன் பேரில் தலைமை காவலர் சகுந்தலா, முத்துகுமார், முத்தரசன் ஆகியோருடன் வழக்கிற்கு தேவையான உபகரங்ணகளை எடுத்துக் கொடுத்து 16.30 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டு 18.30 மணிக்கு காரைக்குடி முனியஸ்வரன் கோவில் சந்து அருகே சென்று கண்காணித்தபோது 19.00 மணிக்கு TN 63 B 6960 என்ற பதிவெண் கொண்ட கோண்டா பேசன் பிளஸ் என்ற இருசக்கர வாகனம் தகவலாளி அடையாளம் காட்டி செல்ல அவரை தாங்கள் நிறுத்தி விசாரிக்க தனது பெயர் வேல்முருகன் த/பெ.ராமன் என்று தெரிவித்தார் என்றும், அவரிடம் தங்களை அறிமுகம் செய்து கொண்டு கஞ்சா விற்பதாக தகவல் வந்துள்ளது என்றும் அதனால் தங்களையும் தங்களது உடைமைகளையும் சோதனை செய்ய நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடம் அழைத்து சென்று சோதனை செய்ய கேட்க தங்களுக்கு உரிமையுள்ளது என்று கேட்டதற்கு வேறு எங்கும் என்னை அழைத்து செல்ல வேண்டாம் என்றும் காவல் ஆய்வாளராகிய தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறி சோதனை சம்மத கடிதத்தில் 19.30 மணிக்கு தான் தயார் செய்த சோதனை சம்மத கடிதம் 1–வது எதிரி கையொப்பம் செய்தார் என்றும், அவருக்கு சோதனை சம்மத கடிதம் கொடுக்கப்பட்டது என்றும், அதில் சாட்சிகளாக சகுந்தா மற்றும் முத்தரசன் ஆகியோர் கையொப்பம் செய்தார்கள் என்றும், அவர் இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் டேங்க் கவரில் வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையை சோதனை செய்தபோது அதில் கஞ்சா, இலை, பூ, காம்பு

உடன் கூடிய கஞ்சா இருந்தது என்றும், அதனை தாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்க்க அதன் எடை 1.500 கிகி இருந்தது என்றும், 20.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் மூலமாக சாட்சிகள் சகுந்தா மற்றும் முத்தரசன் ஆகியோர் முன்னிலையில் கஞ்சா, இருசக்கர வாகனத்தை கைப்பற்றினேன் என்றும் மேற்படி பகுப்பாய்விற்காக கைப்பற்றப்பட்ட கஞ்சாவினை விற்று தலா 25 கிராம் விதம் இரண்டு மாதிரிகள் எடுத்து அதற்கு S1, S2 என்று பெயரிட்டு அதற்கு SHO சீல் வைத்தேன் என்றும், மீதமுள்ள கஞ்சா 1.450 கிகி கஞ்சாவிற்கு NIB CID சீல் வைத்து P1 என்று குறியீடு செய்து விபரல் லேபில் ஒட்டி சாட்சிகள் மற்றும் எதிரிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், கஞ்சா விற்ற காரணம் கூறி எதிரி வேல்முருகன் என்பவருக்கு கைது அறிவிப்பு கொடுத்து கைது செய்தேன் என்றும், அந்த கைது அறிவிப்பில் சகுந்தா மற்றும் முத்தரசன் ஆகியோர் சாட்சிகளாக கையொப்பம் செய்தார்கள் என்றும், எதிரி வேல்முருகன் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதனை சாட்சிகள் சகுந்தா மற்றும் முத்தரசன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன் என்றும், எதிரி மற்றும் தடய சொத்துக்களுடன் 23.30 மணிக்கு நிலையம் வந்து குற்ற எண்.5/2023 சட்டபிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B), 25 NDPS Act-ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.8 என்றும், 1-வது எதிரியை தக்க வழிகாவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், 1-வது எதிரி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கில் 2-வது எதிரியும் சம்பந்தப்பட்டுள்ளதால் 2-வது எதிரியை தான் போலீஸ் பார்ட்டியுடன் சென்று கடந்த 17.02.2021-ம் தேதி இரவு 8.00 மணிக்கு

சிவகங்கை, காரைக்குடி, முனியஸ்வரன் கோவில் சந்து அருகில் வைத்து 21.30 மணிக்கு கைது செய்தேன் என்றும், பின்னர் 2–வது எதிரிக்கு தங்களை அடையாளம் சொல்லியும் அவரை 1–வது எதிரி குறித்து விசாரிக்க 2–வது எதிரி தானாக முன்வந்து 22.00 மணிக்கு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதனை சாட்சிகள் முத்தரசன் மற்றும் சகுந்தா முன்னிலையில் பதிவு செய்தேன் என்றும், பின்னர் 2–வது எதிரிக்கு கைதுக்கான காரணம் கூறியும் கைது அறிவிப்பு கொடுத்தும் கைது செய்தேன் என்றும், பின்னர் 2–வது எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்தும் நிலைய பாரா வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், இவ்வழக்கில் தான் மேற்கொண்ட சோதனை குறித்து 17.02.2021–ம் தேதி தனது உடனடி மேல் அதிகாரியான காவல் துணை கண்காணிப்பாளர் NIB CID மதுரை பொறுப்பு அவர்களிடம் பிரிவு 57 NDPS Act–ன்படியான விரிவான அறிக்கையை சமர்ப்பித்தேன் என்றும், அந்த விரிவான அறிக்கை அதசாஆ.9 என்றும், கைப்பற்றப்பட்ட தடய சொத்தினை படிவம் 95–ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் என்றும், அதற்கான RP No.22/2021 என்றும், அதற்கான படிவம் 95 அதசாஆ.10 என்றும், நீதிமன்ற உத்தரவின்படி கைப்பற்றப்பட்ட தடய சொத்தின் மாதிரியை பகுப்பாய்வுக்கு என நீதிமன்றத்தின் மூலம் பகுப்பாய்வு செய்ய ராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தும் ஆய்வு முடிந்த பின் பகுப்பாய்வு அறிக்கை பெற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதற்கான பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ.11 என்றும், பின்பு சாட்சிகள் 1 முதல் 6 வரையுள்ளவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், 01.07.2021 அன்று எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை

தாக்கல் செய்தேன் என்றும், 1–வது எதிரி வேல்முருகன் கஞ்சா விற்பனைக்கு பயன்படுத்தி கோண்டா பேசன் இருசக்கர வாகனம் சாபொ.1 என்றும், நீதித்துறை நடுவர் அவர்கள் சான்றொப்பம் செய்த புகைப்படங்கள் (எண்ணிக்கை 4) அதசாஆ.12 என்றும், பகுப்பாய்வுக்கு பயன்படுத்தப்பட்டு மீதமுள்ள கஞ்சா இந்நீதிமன்ற உத்தரவுப்படி Drugs disposal Committee மூலம் அழிக்கப்பட்டது என்றும், அதற்கான CRlmp No.4302/2024 Dt.09.08.2024 அதற்கான CRlmp No.4302/2024 உத்தரவு நகல் அதசாஆ.13 என்றும், நீதிமன்றத்தில் கஞ்சாவினை அழிப்பதற்கு முன்பாக எடுக்கப்பட்ட CS1 Sample ganja சாபொ.2 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகள் குறித்து வினாக்களாக தொகுத்து குவிமுச 313 (1)(b) பிரிவின் கீழ் வினவ, எதிரிகள் அவற்றை "பொய் வழக்கு" என்று கூறினார்கள் எதிரிகள் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே, எதிரிகள் தரப்பு சாட்சியம் இல்லையென முடிக்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்னை யாதெனில், 1 வது எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B),25 of NDPS Act 1985 –கீழும் 2 வது எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01– ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் எந்தவிதமான தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பித்துள்ளதா? என்பது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

9. அரசு தரப்பு குற்றத்துறை சிறப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரைப்பில், 1வது எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B),25 of NDPS Act 1985 –கீழும் 2வது எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 ன் படி குற்றச்சாட்டு அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின்வழி தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டுள்ளது இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசிலிக்கப்பட்டது.

10. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரைப்பில், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் NDPS சட்ட வழிவகைகள் முறையாக பின்பற்றப்படாமலும் எதிரிகள் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், ஆகவே எதிரிகளை வழக்கிடை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமென வாதிடப்பட்டுள்ளது மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

11. வழக்கு ஆவணங்கள் மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் அசா1ஆக திருமதி. சகுந்தலா, சிறப்பு சார்பு ஆய்வாளர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக அசாஆ1 முதல் 6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அசா2 ஆக காவல் ஆய்வாளர் திருமதி.ஹேமலதா என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக அசாஆ7 முதல் அசாஆ13 குறியீடு செய்யப்பட்டுள்ளன. சா.பொ.1 மற்றும் 2 ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. அரசு தரப்பில் அசா1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி. சகுந்தலா என்பவரின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில் 17.02.2021–ம் தேதியன்று காலை 16.00 மணிக்கு ஆய்வாளர் ஹேமலதாவிற்கு கிடைத்த தகவலின் பேரில் அந்த தகவலை உயர் அதிகாரிக்கு தெரிவித்தும் , காவல் ஆய்வாளர் ஹேமலதா தலைமையில் தானும், காவலர் அன்பரசன், முத்துக்குமார், சரவணன் ஆகியோர்களுடன் 16.30 மணிக்கு காரைக்குடி முனீஸ்வரன் சந்து அருகே கண்காணித்தபோது தகவலாளி இவ்வழக்கின் 1வது எதிரியை இருசக்கர வாகனத்துடன் வந்து கொண்டிருந்த 1வது எதிரியை அடையாளம் காட்டிவிட்டு மறைய தாங்கள் அவரை பிடித்தும், விசாரித்ததாகவும் , சோதனை செய்ய அவரை நீதித்துறை நடுவர் இடமோ, அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடம் அழைத்துசென்று சோதனை செய்ய எதிரிக்குள்ள உரிமைகளை காவல் ஆய்வாளர் ஹேமலதா 1வது எதிரிக்கு எடுத்துக்கூறியும் 1வது எதிரி கொடுத்த ஒப்புதலின் அடிப்படையில் 1வது எதிரியிடமிருந்த அவர் வைத்திருந்த பையை சோதனை செய்தும் 1.500 கிகி கஞ்சாவை கைப்பற்றியதாகவும், 1வது எதிரி கஞ்சா விற்க பயன்படுத்திய இருசக்கர வாகத்தினையும், கஞ்சாவையும் கைப்பற்றியும் அதில் பகுப்பாய்வுக்கென மாதிரி எடுத்தும் , 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், அவர் கஞ்சா விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்திற்காக காரணம் கூறி காவல் ஆய்வாளர் ஹேமலதா கைது செய்தும் , தடய சொத்துடன் 1வது எதிரி காவல் நிலையம் கூட்டி வந்தும், 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காரைக்குடி செஞ்சை பிள்ளையார்கோவில் வீட்டில் இருந்த இவ்வழக்கின் 2வது எதிரியை பிடித்தும், அவரிடம் காவல் ஆய்வாளர் ஒப்புதல்

வாக்குமூலம் பெற்றும் அவரையும் கைது செய்தும், காவல் ஆய்வாளர் ஹேமலதா காவல் நிலையம் கொண்டுவந்ததாகவும் , காவல் ஆய்வாளர் காவல் நிலைய குற்ற எண்.5/2021–ல் ச/பி 8(c) r/w 20(b)(ii)(B) ,25 of NDPS Act 1985 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும் முன்வைத்துள்ள சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில், 1வது எதிரி சம்பவ சமயம், சம்பவ இடத்தில் சா.பொ.1 இருசக்கர வாகனத்தின் உதவியுடன் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு இருந்தவரை கையும் மெய்யுமாக 1.500 கிகி கஞ்சாவை 1வது எதிரியிடமிருந்து. அசா2 காவல் ஆய்வாளர் கைப்பற்றியுள்ளது அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் பிரகாரம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. அதுவகைக்கு அசா2 ஹேமலதா தான் இவ்வழக்கில் மேற்கொண்டுள்ள சோதனை மற்றும் 1வது எதிரி மீதான கைது நடவடிக்கை குறித்தும் குறிப்பிட்டுள்ள சாட்சியம் அசா1–ன் சாட்சியத்துடன் ஒத்துரைக்கப்பட்டு நம்பகத் தன்மை உடைய ஒன்றாக உள்ளது.

13. அதுவகைக்கு, அசாஆ 11 பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் 1வது எதிரியிடமிருந்து அசா2 அசா1–ன் முன்னிலையில் கைப்பற்றிய தாவர பொருள் கஞ்சா என்பது அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் பிரகாரம் அறிவியல் பூர்வமாக நிரூபணம் செய்யப்பட்டுள்ள்து.

14. இந்நிலையில், சா.பொ.1( பைக் )இருசக்கரம் கொண்ட வாகனம் 1வது எதிரி இவ்வழக்கில் கஞ்சா விற்பனைக்கு பயன்படுத்தியுள்ளது அசா1 மற்றும் 2–ன் சாட்சியத்தின் வழி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, சா.பொ.1 இருசக்கர வாகனம் இவ்வழக்கின் 1வது எதிரியால் வழக்கு

சம்பவத்திற்கு கஞ்சா விற்பனைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

15. இந்நிலையில், 2வது எதிரி பொன்னி குறித்து 1வது எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலமானது இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 25 மற்றும் 27 ன் பிரகாரம் Leading to Recovery of case property ஆக இருக்கவில்லை என்பதால் 1வது எதிரி அசா2 –டம் , அசா1–ன் முன்னிலையில் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் ஏற்கத்தக்க ஒன்றாக அமைய பெறவில்லை .

16. எனவே, அரசு தரப்பில் முன் வைத்துள்ள சாட்சியத்தின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் NDPS சட்டப்பிரிவு 54–ன் பிரகாரம் 1வது எதிரி , சம்பவ நேரத்தில், சம்பவ இடத்தில் கஞ்சாவை இருசக்கர வாகன உதவியுடன் விற்பனைக்கு வைத்திருந்துள்ளது அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி எளிதில் அனுமானிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது. அந்த அனுமானத்தினை மறுத்து உரைக்கும் விதமாக இவ்வழக்கில் 1வது எதிரி தரப்பில் NDPS சட்டப்பிரிவு 54 ன் பிரகாரம் எவ்வித சாட்சியமும் சான்றாவணமும் 1வது எதிரியால் முன்னிடப் பட்டிருக்கவில்லை.

17. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில், 1வது எதிரி மீதான NDPS சட்டப்பிரிவு 8(c)r/w 20(b)(ii)(B),25 of NDPS Act 1985 –ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் அசா1 மற்றும் 2 சாட்சிகளின் சாட்சியம் மற்றும் அசாஆ1 முதல் அசாஆ13 வரையிலான சான்றவாணங்களின் பிரகாரமும் சா.பொ.1 மற்றும் 2– ன் பிரகாரமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு

அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 2 வது எதிரியை குறித்ததான சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B)–ன் கீழான குற்றச்சாட்டு பொறுத்து அதனை மெய்ப்பிக்கும் வகையில் அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் போதுமான ஒன்றாக இருக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை 2 வது எதிரிக்கு சாதகமாக நல்கியும் சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் இவ்வழக்கின் 1 வது எதிரி NDPS சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B),25 –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

19. ஆகவே 1 வது எதிரி சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B),25 of NDPS Act 1985–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என்று முடிவு செய்து, 1 வது எதிரிக்கு வழங்க வேண்டிய தண்டனை குறித்து 1 வது எதிரியிடம் வினவ, 1 வது எதிரி கீழ்கண்டவாறு கூறினார்.

| |
|---|
| எனது வயது 44 ஆகும். என்னை மன்னித்து விடுதலை செய்ய வேண்டுகிறேன். |

ஆகவே, 1 வது எதிரியின் பதிலை கருத்திற்கொண்டும், வழக்கு கோப்பினை பரிசீலித்ததில் இந்த வழக்கானது 2021–ம் வருடத்திலிருந்து விசாரணைக்காக இருந்து வருகின்றது என்பதாலும் , 1 வது எதிரி தவறாமல் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு வருகை புரிந்துள்ளார்

என்பதாலும் 1வது எதிரியின் கோரிக்கையினை ஏற்றும், 1வது எதிரிக்கு இவ்வழக்கில் குறைந்தபட்ச தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் நியாய தர்ம அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

20. முடிவாக 2வது எதிரி ச/பி 8(c) r/w 20(b) (ii)(B)of NDPS Act 1985 ன்கீழான குற்றத்திற்கு குற்றவாளி அல்ல என முடிவு செய்து குவிமுச 235(1)/258 BNSS Act ன் கீழ் விடுதலை செய்தும் , 1வது எதிரி 1985–ம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9–01 ச–பி 8(c) r/w 20(b) (ii)(B),25 of NDPS Act 1985 –ன் படி குற்றவாளி என முடிவு செய்யப்பட்டும் எதிரிக்கு தலா 40 நாட்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் தலா அபராதம் ரூ. 10,000/– விதித்தும், அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் தலா ஒரு வாரம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும், 1வது எதிரி ஏற்கனவே சிறையில் இருந்து வந்த காலத்தை குவிமுச பிரிவு 428ன் படி கழித்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டும் மேலும் இரண்டு பிரிவு தண்டனைகளை ஏககாலத்தில் சேர்த்து அனுபவிக்கவும் உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

1வது எதிரி 18.02.2021 முதல் 31.03.2021வரை சிறையில் இருந்துவந்துள்ளார் .

1 வது எதிரிக்கு இவ்வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ.10,000/– +10,000/– = 20,000/–ஆகும்.

21. இவ்வழக்கில் ஆர்பிஎண்.22/2021–ல் சா.பொ.2 மாதிரி கஞ்சா கஞ்சாவை பொறுத்து இவ்வழக்கில் மேல் முறையீடு காலம் முடிந்த பிறகோ அல்லது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டால் மேல் முறையீடு

முடிந்த பிறகோ பின்னர் உரிய சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு Drugs Disposal Committee மூலம் அழிக்கவும் சா.பொ.1 கோண்டா பேசன் இருசக்கர வாகனம் பழையது என்பதாலும் அவை unclaimed என்பதாலும் அவற்றை இவ்வழக்கின் மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அரசுடமை செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால், சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டும் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மே மாதம் 29–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T PANNEERSELVAM
Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.05.29 17:21:20 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

**<u>சாட்சி பட்டியல்–</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்–</u>**

அ.சா.1 திருமதி. சகுந்தலா, சிறப்பு சார்பு ஆய்வாளர்

அ.சா.2 திருமதி . ஹேமலதா , காவல் ஆய்வாளர்.

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்–</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | சோதனை சம்மத கடிதம் |
| அ.சா.ஆ.2 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.3 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சியின் கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | கைது அறிக்கை. |
| அ.சா.ஆ.5 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சியின் 2வது கையெழுத்து |
| அ.சா.ஆ.6 | கைது அறிக்கை. |

| | |
|---|---|
| அ.சா.ஆ.7 | தகவல். |
| அ.சா.ஆ.8 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.9 | ச/பி 57 ன் படியான விரிவான அறிக்கை. |
| அ.சா.ஆ.10 | படிவம் 95 |
| அ.சா.ஆ.11 | பகுப்பாய்வு அறிக்கை. |
| அ.சா.ஆ.12 | புகைப்படங்கள் –4 |
| அ.சா.ஆ.13 | அழித்தல் உத்தரவு |

**அரசு தரப்பு சான்றுப்பொருள்** –

சா.பொ.1 இருசக்கர வாகனம் கோண்டா பேசன் இருசக்கர வாகனம்

சா.பொ.2 மாதிரி கஞ்சா

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப்பொருள்**–

இல்லை.

T
PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.05.29 17:21:29 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்

அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

பின்குறிப்பு

1. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் உள்ளார்கள்.
2. சாட்சிகள் யாரும் விசாரணையில் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. 1 வது எதிரிக்கு தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது.
   2 வது எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

Fair/Draft
Judgment in C.C.39/2021
Dt. 29.05.2026.